# விவசாய முன்னேற்றம்

PAGANERI.
5525
COMPLIMENTS OF
INFORMATION



55225

# விவசாய அபிவிருத்தி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

COMPLIMENTS OF
THE UNITED STATES INFORMATION SERVICE
MADRAS.

*Produced by The Indian Press Publications, Madras 5,*
*for the United States Information Service, Madras.*



பறித்து உண்ணலாம் போலத்தோன்றும் இந்த வாழைக் குலை பழங்களை மிகுதியாக விளைவிக்கும் விவசாயியின் ஊக்கத்துக்கு ஒரு சான்று.

## விவசாய அபிவிருத்தி

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு வாழ்வார் என்பது முதுமொழி. பல நூற்றுண்டுகளாகவே, நிலத்தில் வேளாண்மை செய்வோர் சுதந்திரமக்களாக நல்வாழ்வு நடத்தி வந்துள்ளனர். தன்கையே தனக் குதவி என்று வாழும் இவர், 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று அதிகாரிகள் திட்டமிடுவதைப் பொதுவாக வெறுப்பர். எனினும், தம் வாழ்க்கைத்தரம் உயர்வதில் மனிதர் எவரும்



அமெரிக்க விவசாயி ஒருவரும் அவரது மனைவியாரும் தங்கள் பண்ணையை அபிவிருத்தி செய்வது பற்றிக் கவுன்டி ஏஜன்டிடம் யோசனை கேட்கிறார்கள். வடிகால் எப்படிக் கட்டுவது, தரிசாகக் கிடக்கும் பகுதியைத் தழைக்க வைப்பது எப்படி என்றெல்லாம் கேட்டறிகிறார்கள்.


ஆர்வம் கொள்வதுபோல், விவசாயிகளும் தம் சர்க்காரின் உதவியைப் பெற உரிமையுண்டு என்று உணர்ந்து வருகின்றனர். இச்சிறு புத்தகம், கிராமாந்திர மக்களுக்கு யு. எஸ். விவசாய இலாகா அதிகாரிகள் செய்துவரும் தொண்டின் சில வழிதுறைகளை விளக்குகிறது. இம்முறைகளைத் தம் தேவைகளுக்கும் பயன் படுத்திக் கொள்ளலாமென்பதை இதர பல நாட்டு விவசாயிகளும் உணர்ந்து வருகின்றனர்.

## கவுன்டி ஏஜென்டு.*

பண்ணைவீட்டுக்குச் செல்லும் பாதையில் ஒருவர் நடந்துகொண்டிருக்கிறார். வயலிலும், கிடங்கிலும் வேலை செய்வோரின் உடை தரித்திருக்கிறார் அவர். விவசாயி அவருக்கு நல்வரவு கூறியபின், இருவரும் வேலிமரத்தில் சாய்ந்து கொண்டு சிறிதுநேரம் பேசிக் கொள்கின்றனர். அதன்பின், வந்தவர் விடைபெற்றுத்தான் பார்க்க


---

*** நம் நாட்டிலுள்ள விவசாய டெமான்ஸ்டிரேட்டர் போன்ற அதிகாரி**



ஜில்லா விவசாய ஏஜன்டுகளுக்கு அலுவலகங்கள் உண்டு; ஆனால் அவர்களைப் பெரும்பாலும் வயற்காடுகளில் விவசாயிகளோடு காணலாம். ஆங்காங்கு தேவை யான யோசனைகளை அவர் விவசாயிகளுக்கு நேரில் போய்க்கண்டு சொல்லித் துணை செய்கிறார்.

வேண்டிய அடுத்த பண்ணைவீட்டை நோக்கி நடக்கிறார்............இவர்தான், தன் வட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டுவரும் யு. எஸ். விவசாய இலாகாவின் கவுன்டி ஏஜென்டு (**County Agent.**) இந்த வட்டத்தில் அவர் பல வருஷங்களாக வசித்து, வேலை செய்து வருகிறார். இப்பிராந்தியத்திலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் அவரைத் தெரியும். தமக்கு வேண்டியபோது உதவி செய்யும் ஒருவராகவே அவர்கள் அவரை மதிக்கின்றனர். விவசாயிகள் என்னென்ன செய்யவேண்டுமென்று திட்டம் போட அவருக்கு அதிகாரமில்லை; எந்தப் பயிர்களை சாகுபடி செய்ய வேண்டுமென்றும் அவர் கூற முடியாது. விவசாயிகள் தேவையென்று கருதுவதால்தான் அவர் அங்கிருக்கிறார். கவுன்டி, ராஜ்ய, தேசீய சர்க்கார்கள் ஒவ்வொன்றும் அவரது சம்பளத்தில் ஒவ்வொரு பகுதியைத் தருகின்றன. இம்மாதிரி 1914 முதல், யு. எஸ். விவசாயிகள் கவுன்டி ஏஜென்டுகளின் உதவியைப் பெற்று வருகின்றனர்.



குதிரைகளை வைத்து உழுவதற்குப் பதிலாக விவசாயிகள் கூட்டுறவு முறையில் ஒரு இயந்திரக் கலப்பையை வாங்கிப் பயன்படுத்தினால் என்ன? இதுதான் இங்கு நடக்கும் பேச்சு. அவ்வாறு சொல்பவர் ஒரு கவுன்டி ஏஜெண்ட்.


கவுன்டி ஏஜென்டுக்கு அதிகாரம் எதுவும் இல்லையெனினும், விவசாயிகளின் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றி, அபிவிருத்தி செய்வதில் அவர்பங்கு அதிகம். விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற அவர், விவசாயிகளிடையே பழகி, அவர்களது தேவைகளை அவர்கள் வாயிலாகவே அறியப் பயிற்சி பெற்றிருக்கிறார். விவசாயத்துறையில் நடந்துவரும் விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகளில், தன் வட்டத்து விவசாயிகளுக்குப் பயன்படும் சிலவற்றை அவர் பொறுக்கிக் கொள்வார். அவரிடமிருந்து விவசாயிகள் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பல— கோழிப் பண்ணைகளின் தரத்தை உயத்துவதெப்படி, பூச்சிகளிடமிருந்து செடிகளை எவ்வாறு பாதுகாப்பது, சீக்கு தீண்டிய பசுவுக்கு என்ன செய்வது, களர்களைவதில் கைதேர்ந்த முறையென்ன, பயிர்செய்யும் ஆரஞ்சுகளை விற்கக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதெப்படி, மாட்டுப் பண்ணைகளை விருத்தி செய்வதற்கு எவ்வாறு கணக்கெடுப்பது, இவை போன்றவை.



கவுன்டி ஏஜென்ட் சொல்வதைக் கருத்தோடு கவனிப்பவர் நிலச் சொந்தக்காரர் ஸ்டோக்ஸ் (இடதுபுறம்). பின்னால் புகை போல் எதையோ கிளப்பிக்கொண்டுவருவது, பருத்தியில் பூச்சி விழாமல் மருந்து தெளித்துவரும் டிராக்டர். டிராக்டர் விடுபவர் ஸ்டோக்ஸின் பக்கத்துப் பண்ணைக்காரர். இங்கு விவசாயிகள் ஒருவருக்கொருவர் உதவி செய்வது வழக்கம்.

# கிராமப் பெண்களுக்கு உதவி


விவசாயின் மனைவிக்கும் பலவிதங்களில் உதவி தேவை. பட்டணத்து ஸ்திரீகளைப்போல் கவர்ச்சியான உடைதரிக்க அவளுக்கும் ஆசையுண்டு. தன் குழந்தைகளுக்குப் புஷ்டி தரும் உணவூட்ட விரும்புகிறாள். குடும்பத்துக்குக் கூடியவரை சுகவாழ் வளிக்க வேண்டுமென்பதே அவள் கவலை. உல்லாசமாகப் பொழுதுபோக்க அதிக நேரம் கிடைக்கும் வகையில் வீட்டு வேலைகளைச் சீக்கிரம் முடித்துவிடக்கூடிய சாதனங்கள், முறைகளில் அவளுக்கு அக்கரையுண்டு. விவசாயிக்கு உதவ கவுன்டி ஏஜென்டு இருப்பதுபோல், குடும்பப் பயிற்சி ஏஜென்டு (Home Demonstration Agent) கிராமப்பெண்களுக்கு உதவுகிறாள். கவுன்டி ஸ்தாபன அதிகாரிகள், ராஜ்ய விவசாயக் கல்லூரி, இவற்றிடம் ஸ்தல மக்கள் கோரியதின் பேரில் தான் இந்த ஏஜென்டும் இங்கு வந்து வசித்து வருகிறாள். ஒரு வட்டாரத்தின் ஸ்திரீகள் இந்த



முன்னால் தெரிகின்ற இந்நிலம் ஒரு வருஷத்துக்கு முன்பெல்லாம் வெறுந்தரையாக, அரிப்பு எடுத்துக் கிடந்தது. இன்று நல்ல மேய்ச்சல் நிலமாக இருக்கிறது. இதில் வளரும் புல் மண் உலராமல் பாதுகாத்து, மண் அரிப்பெடுத்து நிலம் அழிந்துபோகாமல் காக்கவும் உபயோகப்படுகிறது. மேடுபள்ளமான நிலத்தில், சமதளமாகப் பார்த்து வளைத்து உழுதிருப்பதையும் காண்க.


ஏஜென்டின் உதவியை விரும்பினால், முதலில் அவர்கள் 'குடும்பப் பயிற்சிக்குழு' ஒன்றை அமைத்துக் கொள்வர். குழுவினர் வீடுகளில் ஒவ்வொன்றாக மாறிமாறிக் கூட்டம் போடுவர். சில குழுக்களில் அனேக அங்கத்தினர் இருக்க லாம். வேறு சிலவற்றில் ஐந்தாறு பேரே இருப்பர். இவர்கள் அழைப்பின்பேரில், குடும்பப் பயிற்சி ஏஜென்டு அக்கூட்டங்களுக்கு வருவாள். கல்லூரிப்பட்டம் பெற்ற இவள், குடும்பப் பொருளாதாரம் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளைக் குழுவினருக்கு எடுத்துரைப்பாள். (ராஜ்ய பரி சோதனை ஸ்டேஷன்கள், யு. எஸ். விவசாய இலாகா, இன்னும் பல ஸ்தாபனங்கள் இத்துறை யில் ஆராய்ச்சி நடத்தி வருகின்றன.)

பலவித உடைகள் வெட்டித் தைக்கும் மாதிரிகளையும், வெவ்வேறு விதமாக உணவுப் பதார்த்தங்களைத் தயாரிப்பது, அவை ஊசாமல் கெடாமல் வைத்திருப்பதற்கான பக்குவங்கள் பற்றியும், அந்த ஏஜென்டு எடுத்து விளக்கி,



ஆரஞ்சும் எலுமிச்சையும் அதிகமாக வளரும் கலிபோர்னியா ராஜ்யத்தில் ஓரிடம். இந்த ராஜ்யத்தில் வேனிற் காலத்தில் மழை அதிகம் இல்லாததால், சில பகுதிகளில் கிணறுகள் உண்டு; பல இடங்களுக்கும் நெடுந் தொலைவிலுள்ள ஆற்று நீர் கால்வாய்கள் மூலம் வந்து பாய்கிறது.

நேரில் செய்தும் காட்டுவாள். குழந்தை வளர்ப்பு சம்பந்தமான பல விஷயங்களைப் புகட்டுவாள். உடைந்துபோன வீட்டுச் சாமான்களைத் தாமே ரிப்பேர் செய்வதெப்படி; சமையல் சாமான்கள், அடுப்பு, தண்ணீர் பாத்திரங்கள் இவற்றை எந்த உயரத்தில் வைத்திருந்தால் அதிக சிரமமின்றி எடுத்துக் கையாள முடியும்; வீட்டில் விளக்கு களை எவ்விதம் மாற்றியமைத்தால், செலவில் லாமல் அதிக வெளிச்சம் பெறலாம்; அவ்வட்டத் துக்குத் தனியாகப் பல் வைத்யசாலை யொன்றைப் பெறுவதெப்படி — இதுபோன்ற விஷயங்களி லெல்லாம் அவள் யோசனை கூறுவாள். ஒவ் வொரு குழுக்கூட்டத்திலும், அங்கத்தினர் விரும்பிக்கேட்ட விஷயங்கள் பற்றியே அவள் பேசுவாள். தன் ஆபீசுக்கு வந்தோ, அல்லது டெலிபோன் மூலமோ, கிராமப் பெண்கள் கேட் கும் பல கேள்விகளுக்கும் விடைதருவது அவள் வேலையாகும்.



அளவுக்கு மிஞ்சி உழுவதாலும், ஆடுமாடுகளை மேயவிடுவதாலும், புயல் காற்றினாலும், வறட்சியாலும் நிலம் பாழாகிப் போம் என்பதற்கு இந்த நிலம் சாட்சி. காற்றைத்தடுக்க நீண்ட தோப்புகளாக உயர்ந்த மரங்களை வைத்தும், வறட்சியைத் தடுக்க நீர்ப்பாசன வசதி செய்தும், ஏராளமான பாழ் நிலத்தைப் பயிர் நிலமாக்க 1934 முதல் அமெரிக்க விவசாய ஸ்தாபனங்கள் திட்டம் வகுத்துள்ளன.

நாளைய விவசாயியும், விவசாயியின் மனைவியு மாகப் போவது இன்றையக் குழந்தைகளே. கவுன்டி ஏஜென்டும், குடும்பப் பயிற்சி ஏஜென் டும் தம் நேரத்தில் பெரும்பகுதியை இச்சிறுவர் களிடையே கழிக்கின்றனர். "செய்வதன் மூலம் கற்றுக்கொள்" என்ற தத்துவத்தில் அக்கறை யுள்ள சிறுவர்கள், "4—எச் கிளப்" என்ற சங்கங்களை அமைத்துக் கொள்வர். மூளை, கைகள், இருதயம், தேகாரோக்யம் **(Head, Hands, Heart and Health)** என்று நாலு ஆங்கிலச் சொற்களைக் குறிக்கும் இச்சங்கங்கள், சகல வகையிலும் சீரான வாழ்க்கைக்குச் சிறுவர் களைத் தயார் செய்யும் நோக்கம் கொண்டவை. சிறுவர்கள் தம் ஆபீசர்களைத் தாங்களே தேர்ந் தெடுத்துக்கொண்டு, தம் வேலைத்திட்டங்களையும் தாமே வகுத்துக்கொள்வர். கவுன்டி ஏஜென்டும், ஸ்தல தொண்டர் ஒருவரும் இவ்வேலையில் சிறுவர்களுக்கு உதவியளிப்பர். ஒவ்வொரு பருவ



விருப்பு வெறுப்பின்றி விளைச்சலை ஆராய்கிறார்கள் இவர்கள். நிலம் இந்த விஞ்ஞான முறைப்படி புதிதாகப் பயிர்செய்யப் பட்டுள்ளது. இதன் பலன்களை ஆராய்ந்து பார்த்து இவர்கள் ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிவிப்பர். நல்ல பலன் ஏற்பட்டிருப்பதால் ஊரார் அனைவரும் புதுமுறையைக் கையாளுவர். இவர்கள் இருவரும் அந்த ஊரில் இதற்கென்றே அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின் உறுப்பினர்.

காலத்திற்கேற்ப ஒவ்வொரு சிறுவனும் ஏதாவ தொரு வேலையை மேற் கொள்ளுவான். உதாரண மாக, ஒருவன் கோழி வளர்த்து, பிற்பாடு முட்டை களை மார்க்கெட்டுக்கு எடுத்துச் சென்று விற் பான்; அல்லது தோட்டம் போட்டுச் செடிகள் பயிரிடுவான். இதுதவிர கிளப் மெம்பர்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் பொதுத்திட்டம் ஒன்றிருக்கும். வனவிலங்குகளைக் கண்டு கவ னித்து அவற்றின் வாழ்க்கையைப் பற்றியறிதல், சிறுமுறையில் மண்சாரப் புனரமைப்புத் திட்டம், தம் டவுன் ஹால் அல்லது பொது ஸ்தலங்களை அழகுறச் செய்தல், முதலிய பல பொது வேலை கள் உண்டு. இம்மாதிரியான எந்த வேலை யிலும், கவுன்டி ஏஜென்டும், குடும்பப் பயிற்சி ஏஜென்டும் சிறுவர்களுக்கு உதவுவர். கிராம சமூக வாழ்வில், தாம் பிற்பாடு பெரிய அளவில் செய்யப்போகும் அலுவல்களைப் பற்றிச் சிறுவர் கள் இப்போதே ஓரளவு அனுபவ அறிவை அடைகின்றனர்.



விளைவிப்பதும் அறுவடை செய்வதும் அமெரிக்காவில் ஆண்டு முழுவதும் நடக்கும் வேலைகளாகும். ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு வகையான காய்கறிகளும் பழ வகைகளும் விற்பனைக்குத் தயாராகும். அவை குளிர் பதனம் செய்யப்பட்ட கார்களில் ஏற்றி அனுப்படலாம்; குப்பிகளில் அடைக்கப்படலாம்; அல்லது உறைவிக்கப்படலாம். இது கலிபோர்னியாவிலுள்ள ஒரு வயல்.

# மண்சாரப் பாதுகாப்பு

நிலம் சாரமற்றுப் போவதால் பலன் குன்றி, மக்களின் ஆரோக்யம் கெட்டு, வாழ்க்கைத் தரம் சீர்குலைகிறது. வேறு நாடுகளைப்போல், அமெரிக்காவில் சில பகுதிகளிலும், நீரோட்டக் கறைவாலும், விவசாயியின் அசிரத்தையாலும், நல்ல நிலம் சாரமிழந்து விடுவதுண்டு. இந்த அபாயத்தை விவசாயி உணரும்போது, பலவருஷச் சீர்கேட்டை அவன் தன் தனிமுயற்சியால் மட்டும் சரிப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடுவதுண்டு. அச்சமயத்தில், மண் சாரத்தை எவ்வாறு புதுப்பிப்பது என்பது பற்றி எடுத்துக் காட்ட விஞ்ஞானிகளின் உதவி தேவையாகிறது. இவ்வுதவியை எப்படிப் பெறுவது என்பதுதான் பிரச்னை. ஒரு பிராந்தியத்தில் தம் நிலம் சத்து இழந்து வருவதை விவசாயிகள் உணர்ந்தவுடன், எப்படி அதைச் சீர்திருத்துவதென்று தமக்குள் பேச ஆரம்பிப்பர். நாட்டின் பல விவசாயிகளின் அனுபவத்திலிருந்து இவர்கள் அடுத்தபடியாகச்



அறுவடை இயந்திரங்கள் வைத்திருப்பவர் வயலின்சொந்தக்காரரை அணுகி எப்பொழுது அறுவடை செய்யலாம் என்று கலந்தாலோசிக்கிறார். கோதுமைக்கதிர் முற்றிவிட்டதா என்று கையில் வைத்துக் கசக்கிப்பார்க்கிறார்கள் இருவரும். அறுவடை செய்யக் கூலி முதலியன வெல்லாம் பேச்சிலே முடிவு செய்யப்படுகின்றன.

செய்வது மண்சாரப் புனரமைப்பு போர்டு **(Soil Conservation District)** ஒன்றை அமைத்துக் கொள்வதுதான். அப்பிராந்தியத்திலுள்ள அனைவரும் இவ்வேலைக்கான நேரம், உழைப்பு இவற்றை அளிக்கத் தயாராயிருக்கின்றனரா என்பதை யறியக் கூட்டங்கள் போட்டுக் கலந்து பேசி, ஒரு போர்டு அமைக்கத் தீர்மானிப்பர். தம் நிலத்தின் சத்தை மீட்டுக் கொடுத்து, அபிவிருத்தி செய்வதற்கு விவசாயிகள் தாமே அமைத்துக் கொள்ளும் லோக்கல் போர்டு ஸ்தாபனமே இது. முதன் முதலாக அமெரிக்காவில் 1937-ல் இம்மாதிரி ஒரு போர்டு அமைக்கப்பட்டு, இது வரை 2,300 போர்டுகள் ஏற்பட்டுள்ளன. இன்று யு. எஸ். விவசாயப் பண்ணைகளில் 75 சதவிகிதத்துக்கு மேல் இந்த போர்டுகளால் பரிபாலிக்கப் படுகின்றன. இந்த போர்டுகள், அரசாங்கத்தைக் கேட்டு நிபுணர்களின் உதவியைப் பெறுகின்றன.

இந்த போர்டின் கோரிக்கையின் பேரில், யு. எஸ். விவசாய இலாக்காவைச் சேர்ந்த மண்



கோதுமைக் கதிர்கள் முற்றிவிட்டனவா, அறுவடை செய்யலாமா என்று இரண்டு விவசாயிகள் கதிர்களைக் கவனிக்கிறார்கள். அறுவடை செய்யும் இயந்திரம் வைத்திருப்பவர் பக்கத்தில் நின்று பார்க்கிறார்.

சாரப் பாதுகாப்பு சர்விஸ் ( **Soil Conservation Service**) நிபுணர் ஒருவர் அனுப்பப் படுவார். நிலத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் வகுப்பதில் இவர் விவசாயிகளுக்கு உதவுவார். ஒவ்வொரு பண்ணைக்கும் விஜயம் செய்து, விவசாயியுடன் அதைச் சுற்றிப் பார்வையிடுவார். ஒரு பக்கத்தில், மழைத் தண்ணீர் அடித்தோடி ஆழ்ந்த கால்வாயாக மாறிவிடக் கூடிய அறிகுறிகளைக் காண்பித்து எவ்வாறு அங்கு மடைபோட்டு அதைத் தவிர்க்கலாம் என்று கூறுவார். மற்றொரு மூலையில், அருகிலுள்ள குன்று, குழிகளின் போக்குக்கு ஒத்தவாறு ஏரை வளைத்து விடாமல் நேராக உழுவதால் மண்ணும் நீரும் அடித்துச் சென்று வீணாகிவிடும் விஷயத்தை எடுத்துக் காட்டுவார். அப்பண்ணையின் பல்வேறு பாகங்களின் மண் வாசியை ஆராய்ந்து பரிசோதித்து, எங்கே எந்தப்பயிர் நன்றாக விளையும் என்பது பற்றி யோசனை கூறுவார். விவசாயியும் அந் நிபுணரும் சேர்ந்து இதற்கான திட்டம் ஒன்று வகுப்பர். அதன்படி நடக்க விவசாயி ஒப்புக்



வறண்டு கிடந்த நிலம் நீர்ப்பாசன வசதி பெற்று வளம் பொருந்திய பண்ணையாக மாறிவிட்டது. இது கலிபோர்னியாவில் ஓரிடம். அங்குள்ள சாக்ரமென்டோ ஆற்றிலிருந்து 440 மைல் நீளத்துக்கு நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. இத்தகை எஞ்சினியரிங் திட்டங்கள் இல்லையானல் இங்கு இவ்வயலைக் காணமுடியாது.

கொண்டால், அந்நிபுணர் நீடித்து அவருக்கு ஆலோசனை கூறி உதவுவார்.

## ஒரே நாளில் புதுப்பண்ணைகள்

இவ்வித நடவடிக்கைகளால் உண்மையிலேயே நிலச்சத்தைப் புதுப்பித்து விடுவது சாத்தியந்தானு? உலகில் எப்போதுமே பலர் இவ்வாறு எதைப் பற்றியும் சந்தேகங்களைக் கிளப்புவது வழக்கம். இவ்விஷயத்தில் யு. எஸ். அதிகாரிகள் கடைப்பிடிக்கும் கைகண்ட போதனு முறை, "கண்ணுல் கண்டால், தானுக நம்பிக்கை பிறக்கும்" என்பதுதான்.

ஒவ்வொரு வருஷமும் பல்லாயிரம் பண்ணைகளில் இவ்வேலை நடந்துவருகிறது. அவற்றில், ஓஹியோ ராஜ்யத்தைச் சேர்ந்த பிரௌன்ஸ்வில் கவுன்டியில், பாழான இரு பண்ணைகளில் ஒரே தினத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதலைக் கவனிப்போம். அரசாங்க கன்ஸர்வேஷன் சர்விஸ் உதவியுடனும், பண்ணைக்காரர்களின் ஒத்துழைப்புடனும், ஸ்தல கன்ஸர்வேஷன் போர்




நீர்வற்றிக் கிடந்தது ஒரு ஏரி. அங்கு நிலத்தைத் திருத்திப் பலர் குடியேறினர். அவர்களில் மூவர் ஒன்று சேர்ந்து உருளைக்கிழங்கு பயிர் செய்துள்ளனர். அவர்களது நிலத்தில் உருளைக்கிழங்கைத் தானே தோண்டியெடுத்துப்போடும் இயந்திரம் வேலை செய்வதைக் காண்க.

டார் பல மாதங்களாக இதற்குத் திட்டம் போட்டு ஏற்பாடுகள் செய்து வந்தனர்.

கன்ஸர்வேஷன் வேலை நடக்கும் தினத்தன்று, அப்பிராந்தியத்திலுள்ள பல பண்ணைக்காரர்களும் அவ்வதிசயத்தைக் காண அங்கு கூடிவிட்டனர். இவ்வேலையின் அவசியத்தை யுணர்ந்த 600 விவசாயிகள் வயல்களில் இறங்கி வேலையில் முனைந்தனர். மழையடித்துச் சென்ற பள்ளங்களை ஒரு நொடியில் தூற்று, குன்றுச் சார்புகளுக் கேற்ப ஏர்களை வளைத்து ஓட்டி வேலிகளை மாற்றிக் கட்டி விருவிருப்பாக வேலை நடந்தது. புதுக் கிடங்கு ஒன்று கட்டப்பட்டது. பல தலை முறைகளாகப் பார்வையற்றுப் பாழடைந்துவந்த நிலம் ஒரே நாளில் உருமாறி விட்டது.

## விஞ்ஞானம் செய்யும் தொண்டு


விவசாயிக்கு உதவுவோரில், அவன் நேரில் பார்த்திராத பலரும் உண்டு. அவர்கள் தான், விஞ்ஞான ஆராய்ச்சிசாலைகளில் ரசாயன




ஏலத்துக்கு வந்துள்ள ஒரு ஜோடிக்குதிரைகளைப் பலர் பார்க்கிறார்கள். அமெரிக்காவில் விவசாய இயந்திரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும் இன்னும் சிலர் சிலவேலைகளுக்கு இந்தக் குதிரைகளையே உபயோகிக்கிறார்கள்.

ஆராய்ச்சியிலும், கண்ணுக்குத் தெரியாத சிற்றுயிர் ஜந்துக்கள் பற்றிய ஆராய்ச்சியிலும் தம் காலத்தைக் கழிப்பவர்கள். யு. எஸ். விவசாய இலாகாவின் கீழ் 4,100 விஞ்ஞானிகள், நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 400 நிலையங்களில் விவசாய சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இவற்றில் பல "பீல்டு ஸ்டேஷன்" என்று நாட்டுப்புறங்களில் அமைக்கப்பட்டு, சுற்றுப்புற விவசாயிகளின் தேவைகள் சம்பந்தமான ஆராய்ச்சியில் முனைந்துள்ள சிறு நிலையங்கள். தம்தம் பிரச்னைகளைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக ஸ்தல விவசாயிகள் அடிக்கடி இந் நிலையங்களுக்கு வருவதுண்டு.


இவற்றைவிடப் பெரிய நிலையங்களில் **(Regional Laboratories)** ஒரு விவசாயப் பிராந்தியம் பூராவுக்கும் பொதுவான பிரச்னைகள் பற்றி ஆராய்ச்சி நடக்கும். உதாரணமாக, பருத்தி பயிராகும் பிராந்தியத்தில் உள்ள நிலையத்தில், எவ்வாறு பருத்தியைப் புதுப்புதுத் தொழில்களில் பயன்படுத்துவது என்று ஆராய்ச்சி நடக்கும்.



வெள்ளத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படும் இயந்திரம் இது. அரசாங்கத்துக்குச் சொந்தமான இதை கீழ்க் கொலராடோ நதி நிர்வாகத்திடமிருந்து டெக்ஸாஸ் ராஜ்ய விவசாயிகள் சிலர் தங்கள் உயோகத்துக்காக இவற்றை வாங்கியுள்ளனர்.




தமது பண்ணையிலுள்ள குண்டு குழிகளை நிரப்பி நிலத்தைச் சமதளமாக்கிச் சரியான வடிகால் ஏற்படுத்துவதற்கு அமெரிக்க விவசாயி ஒருவர் அரசாங்கத்திடமிருந்து இந்த இயந்திரத்தை இரவல் வாங்கியிருக்கிறார்.



டென்னஸி ஆற்றில் ஓர் அணை.

இவை தவிர, அமெரிக்காவிலுள்ள 48 ராஜ்யங்களிலும் தனித்தனி விவசாயப் பரிசோதனைச் சாலைகள் உண்டு. ஒவ்வொன்றில் நடக்கும் பரிசோதனை முடிவுகள் பிறவற்றிற்கும் அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் உள்ள "நில மான்ய"க் கல்லூரிதான் (**Land Grant College**) நாட்டின் பல பாகங்களிலும் நடக்கும் ஆராய்ச்சி முடிவுகளைச் சேகரித்து, அவை விவசாயிக்குப் பயன்படுமாறு பரவச் செய்கின்றது. 1862 முதல், தேசீய சர்க்காரின் மான்ய உதவி இக்கல்லூரிகளுக்கு ஓரளவு கிடைத்து வருகிறது. கவுன்டி ஏஜென்டுகளும், குடும்பப் பயிற்சி ஏஜென்டுகளும் இக்கல்லூரிகளின் சிப்பந்திகளே யாவர். விவசாயிகளுக்கு எடுத்துரைக்கும் ஆராய்ச்சியறிவை இவர்கள் இங்கேதான் பெறுகின்றனர். விவசாயிகளின் பிரச்னைகளை இவர்கள் விஞ்ஞானிகளிடம் கொண்டுவந்து பரிகாரம் தேடும் இடமும் இதுதான். சாமானிய விவசாயப் பண்ணைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம்




இதுபோன்ற மாபெரும் அணைக்கட்டுகள் ஆற்றின் வேகத்தைத் தடுத்து வெள்ளத்தால் அழிவு ஏற்படாதபடி காக்கின்றன. இந்த அணை டெக்ஸாஸ் ராஜ்யத்தில் உள்ளது. இதனால் மின்சாரமும் உற்பத்தியாகிறது. இதனால் வரும் வருவாயைக் கொண்டு அரசாங்கம் பல இயந்திரங்களை வாங்கி விவசாயிகளுக்கு இரவல் கொடுக்கிறது.

உயரும் வகையில், விஞ்ஞானிகளின் அறிவைப் பயன்படுத்துவதுதான் அமெரிக்க விவசாய ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

## முன்னேற்றத்தில் பங்குதாரர்கள்

அமெரிக்க விவசாயிகளுக்கு சர்க்கார் அதிகாரிகள் செய்யும் தொண்டுகள் பல. ஆனால் அவர்கள் வெற்றி பெறவேண்டுமானால், தனக்குத்தானே உதவிக் கொள்ளவேண்டுமென்ற ஆர்வம் விவசாயிக்கு இருக்கவேண்டும். இவ்வேலையில் முதல் முயற்சி விவசாயியிடமிருந்தே வரவேண்டும். பண்ணைக்காரர்கள் ஒன்றுகூடித் தமக்கு எத்தகைய உதவி தேவை என்பதை நிர்ணயித்துக் கொள்வர். பின்பு அனைவரும் சேர்ந்து அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொள்வர்.

இதர தொழில்களில் ஈடுபட்டுள்ளவரைப் போல், அமெரிக்க விவசாயிகளும், தேசீய சர்க்காருக்கு வருமானவரி செலுத்துகின்றனர். அவரவர் சக்திக்குத் தக்கவாறு அவ்வரி விதிக்கப்படும். சுமார் வருமானமுடைய ஒருவன், அதிக வருமான




அமெரிக்க விவசாய இலாகாவின் ஆராய்ச்சிகளுக்கு இது ஓர் உதாரணம். படத்தில் நடுவில் தெரியும் பகுதியில் தண்ணீரை உறிஞ்சக்கூடிய ஒரு ரசாயனப் பொருளைக்கொட்டிப் பரப்பியிருக்கிறார்கள்; இதில் பல பயிர்கள் பயிர் செய்யப்படும்; பயிருக்கு வேண்டிய சத்துக்கள் வேறு பொருள்கள் மூலம் தண்ணீர் கலந்து ஊட்டப்படும் தேவைக்கு அதிகமானது வடியவைக்கப்படும்.

முள்ள மற்றவரைக் காட்டிலும், குறைந்த தொகை கொடுப்பது மட்டுமில்லாமல், தன் மொத்த வருமானத்தில் குறைந்த சத விகிதமே வரி கொடுக்கிருன். பெரிய குடும்பஸ்தன், குறைந்த குழந்தைகளேயுடையவனேவிடக் குறைவாகவே வரி கட்டுவான். மிகக்குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் இவ்வரி கொடுப்பதே யில்லே. விவசாயி தன் வருமானத்திலிருந்து, நிலத்தை அபிவிருத்தி செய்யவோ, உரம், விதை, மாடுகள் வாங்கவோ செலவிடும் பகுதிக்கு வரி கொடுப்பதில்லே.

யு. எஸ். விவசாய இலாகா அளித்துவரும் மேற்கண்ட சர்விசுகள், எல்லா நாடுகளிலும் செய்யக் கூடியவையே.

## மஹேவாவுக்கு வந்த மங்களவாழ்க்கை


உத்தரப் பிரதேசத்திலே, ஆக்ராவுக்கு 76 மைல் தூரத்தில் மஹேவா என்ற கிராமத்தில், சிறந்த விவசாய முறைகள் மூலம் கிராம சமுதாயம் சுபிட்சமடைவதற்குக் கைகண்ட திட்டமொன்றுண்டு. இந்தியாவின் 6·6 கோடி விவ



மேடும் பள்ளமுமாய் உள்ள நிலத்தில் ஏரை வளைத்து ஓட்டி, சமதளமாகப் பார்த்துச் சாலடிப்பது இன்றைய வழக்கம். இவ் வழக்கம் பரவுவதற்கு முன்பு இருந்த ஓர் அமெரிக்கப் பண்ணையின் காட்சி.

சாயிகளும் இதைக் கையாண்டு லாபமடையலாம். **எட்டாவா மாதிரி அபிவிருத்தித் திட்டம் (Etawah Pilot Development Project)** ஆரம் பித்த இரண்டு ஆண்டுகளுக்குள், 100 கிராமங் கள் கொண்ட ஒரு தொகுதியில், கிராமப் பொரு ளாதார நிலை அடியோடு மாறிவிட்ட காட்சியை இங்கே காணலாம்.

சுபிட்சமும் வாழ்க்கையில் திருப்தியும் கண்ட மஹேவாவைச் சுற்றியுள்ள விவசாயி களின் நிலைமைக்கு உதாரணமாக ராம்கிஷன் என்பவரை எடுத்துக் கொள்வோம். அவர் ஆஜாத்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர். தன் வெற் றிப் பிரதாபத்தைக் கூறுகையில், ஆனந்தத்தால் அவர் முகம் மலர்ந்தது. "இரு வருஷங்களுக்கு முன், சில்லரை வியாபாரியாக இருந்தேன் நான். ரொம்ப சிரமத்துடன், அன்றாடவாழ்க்கைக்கு ஏதோ கொஞ்சம் சம்பாதித்துக் காலம் தள்ளி னேன். சுமார் முக்கால் ஏகர் நிலமே என்னிடம் இருந்ததால், விவசாயத்தில் இறங்க இடமில்லை. ஆனால் இதெல்லாம் இன்று அடியோடு மாறி



நிலப்பூச்சி என்னும் புழுவை வளர்ப்பது எப்படி என்று லாரன்ஸ் லெமன் என்பவர் கூறுகிறார்; விநோதமாகத் தெரியும் இவ்விஷயத்தை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருக் கிறார் ஒரு விவசாயி. நிலப்பூச்சிஅமெரிக்காவில் நூறு இடங்களில் விற்பனையாகிறது.

விட்டது. இரண்டு வருஷத்துக்கு முன் ஒரு நாள் மாலையில் நான் வீட்டுக்குத் திரும்பியபோது, ஊரில் எங்கும் புதிய பரபரப்புக் காணப்பட்டது. சரியாக எனக்கு விளங்காத ஏதோ விஷயம் பற்றி என் விவசாய நண்பர்கள் பேசிக்கொண்டிருந் தனர். பல மாதங்கள் ஆனபின், அறுவடை காலம் வந்தபோது, சுற்றுப்புற கிராமங்களி லெல்லாம் ஒரே ஆனந்தமும், களிக் கூத்துமா யிருந்தது. அமெரிக்க நிபுணர் ஒருவர் சொல்லிக் கொடுத்த வழியில் சாகுபடி செய்து, ஊராரெல் லாம் ஏராள மகசூல் பெற்றிருந்தனர். அன்றெல் லாம் அந்நிபுணரின் பெயரே எங்கள் வாயில் நுழையாது; இன்ரே **ஹோரஸ் ஹோம்ஸ் (Horace Holmes)** என்பவரின் பெயரைத் தெரி யாத குழந்தைகள் கூடக் கிடையாது எங்கள் பிராந்தியத்தில்.''

ராம்கிஷன் மேலும் கூறுகிருர்: ''ஊராரின் சுபிட்சத்தைப் பார்த்து, இங்கு ஏற்பட்டிருக்கும் அதிசயத்தைப்பற்றி நான் சிந்திக்கலானேன். என்னைப்போல் அற்ப வாழ்வு நடத்துவோர் ஐசு




காலையில் செய்த வேலையை மாலையில் சுற்றிப்பார்க்கிறார்கள். இவர்கள் அறுவடை இயந்திரங்களை இயக்குபவர்கள். தங்கள் இயந்திரங்களைப் பழுதுபார்க்கவும் அவற்றைத் திறமையாக இயக்கவும் இவர்களுக்குத் தெரியும்.

வரியம் பெறுவதற்கு வழி விவசாயமே என்று தீர் மானித்தேன். ஆனால் நிலத்திற்கு எங்கே போவது? சொற்ப நிலமுள்ள சிறு பண்ணை யிலும், என் குடும்பத்துக்குப் போதிய அளவு பயன்பெற முடியும் என்று ஸ்ரீ ஹோம்ஸும் அவரது உதவியாளரும் எனக்குக் கூறினர். அதோடு என் சில்லரை வியாபாரத் தொழிலை விட்டு, கச்சத்தை இறுகக் கட்டிக்கொண்டு, என் பரம்பரை நிலத்தில் சாகுபடியில் இறங்கினேன். பிராஜெக்ட் அதிகாரிகள் உதவியால் கிடைத்த நல்ல உருளைக்கிழங்கு விதைகளை என் நிலத்தில் நட்டுப் பயிர் செய்தேன்.

"விவசாயத்தில் கற்றுக்குட்டியான எனக்கு ஸ்ரீ ஹோம்ஸ் ஆரம்பித்து நடத்திவந்த மாதிரி பிராஜெக்டின் விவசாய நிபுணர்கள் அவ்வப் போது யோசனை கூறி உதவினர். இலவசப் பயிற்சி சாலைகளில் சேர்ந்து, நிலத்துக்குத் தக்க உரம் வைப்பது எப்படி என்று கற்றுக்கொண் டேன். பெரிய பெரிய கிழங்குகளை முதல் தடவை வெட்டியெடுத்தபோது என் ஆனந்தத்திற்கு அள



கிளென் டேரோ என்பவரும் ஹாரி ஸ்டீவன்ஸ் என்பவரும் ஓரிடத்து விவசாயிகள். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து நவீன விவசாய இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்தி ஆடு மாடுகளுக்கு வேண்டிய புல், தழை முதலியவற்றை விளைவித்து, கட்டுக் கட்டாகக் கட்டி அனுப்பி விற்று, நல்ல பலன் அடைந்து வருகிறார்கள்.

வில்லே. இதைவிட எனக்கு ஊக்க மளிக்க வேறெதுவும் வேண்டியதில்லே. அடுத்த முறை இன்னும் மும்முரமாக என் வேலேயில் முனேந் தேன். இந்த வருஷத்தில் கிடைத்த பலன் எனக்கே ஆச்சரியமாய் விட்டது. முக்கால் ஏகர் நிலத்தில் 400 மணங்கு முதல்தரமான கிழங்கு வெட்டினேன் என்ருல், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்."

ராம்கிஷன் தன் சந்தோஷத்தையும், வரப் போகும் காலத்தில் தான் எதிர்பார்க்கும் பலன் பற்றிய நம்பிக்கையையும் பற்றி ஒரு குழந்தை யைப்போல் பேசலாஞன். "என் பண்ணேக்கு வேண்டிய விதைக்கு ஒதுக்கிவைத்தது போக, மீதியை மணங்கு ரூ. 6 வீதம் விதைக்கிழங்காக விற்றேன். எனக்கு ரூ. 2,400 கிடைக்கும்; ஆஞல் இது பூராவும் என் லாபக் கணக்கில் சேராது. என் உழைப்பு தவிர ரூ. 1,800 செல வழித்திருக்கிறேன். இதில், என் மனேவி மூன்று குழந்தைகளுடைய குடும்பத்துக்கு அடுத்த மாசூல்வரை வேண்டிய உணவு, நல்ல உடை,




இரண்டு மூன்றுவகைச் சோளங்களைச் சேர்த்து ஒட்டுச் சோள வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய ஒட்டுச்சோளக் கதிர்கள் சிலவற்றை இங்கு காண்கிறோம். இவற்றுள் சிறியவை இரண்டும் உரம் வையாத இடத்திலும், பெரியவை உரம் வைத்த இடத்திலுமாக ஒரே நிலத்தில் உண்டானவை.

சொற்ப சுகஜீவன வஸ்துக்கள் எல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன். என் சொந்தத்துக்கு, ரொம்ப காலமாக நான் ஆசைப்பட்டு வந்த சைகிள் ஒன்றும் வாங்கியிருக்கிறேன்."

ஆனந்தம் பொங்கிய முகத்துடன் நின்ற அவனுக்கு இன்னும் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இந்திய விவசாயி ஒருவனின் சராசரி வருஷ வருமானம் ரூ. 42 தான் என்று அவனிடம் சொன்னபோது, வான்நோக்கித் தன் கைகளை விரித்து, "ஸ்ரீ ஹோம்ஸ் பாரதநாடு பூராவும் சுற்றி, மஹேவாவில் நாங்கள் செய்ததை வேறு விவசாயிகளும் செய்யும்படி சொல்லிக் கொடுத்தாலென்ன? அங்கெல்லா மிருக்கும் விவசாயிகள் அனைவரும் இங்கு வந்து போகமுடியாதல்லவா?" என்று கேட்டான்.

விவசாயி ராம்கிஷனின் வெற்றியானது ஒண்டி சண்டியாக, எப்படியோ ஏற்பட்டுவிட்ட தனி விஷயமல்ல. மஹேவா பிராந்தியம் பூராவிலும், ஆயிரக்கணக்கான பண்ணைக்காரர்கள் முன்னைவிட அதிகச் சோளம், கோதுமை, உருளைக்



உயரத்தெரியும் விமானம் விதை விதைக்கிறது. எதுவரை விதை தூவலாம் என்று கொடிப்பிடித்துக் காட்டுபவர் மந்தை மந்தையாக ஆடுமாடுகளை மேய்ப்பவர்.

கிழங்கு முதலியன பயிர் செய்து, புதிய விவசாய முறைகளின் பலனை அனுபவிக்கின்றனர்.

பதேபூர் என்ற இன்னொரு கிராமத்தில், நல்ல ஸ்கூல் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதில், 70 சிறுவர்கள் ஆரம்பக்கல்வி பெறுகின்றனர்.

## கனவு நனவாயிற்று

"இம்மாதிரி நல்ல மகசூல் எப்படிக் கிடைக்கிறது?" என்று கேட்டதும், ஜபீர்சிங் என்ற விவசாயியின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை தோன்றியது. சற்றே தன் புருவத்தை நெரித்து யோசித்த பின் அவர் கூறுவார்: "எட்டாவா பிராஜெக்டின் வெற்றியை நேரில் கண்டறிய வருஷம் பூராவும் பலர் இங்கு வந்து செல்கின்றனர். 1948-ம் வருஷப் பின்பகுதியில், ஆல்பர்ட் மேயர் **(Albert Mayer)** என்ற அமெரிக்கர் ஒருவர், கிராமப் புனருத்தாரண வேலையில் சிரத்தை கொண்டார். மேயர் துரையின் கனவை, ஹோம்ஸ் துறை நிறைவேற்றினர். இதை அவர் செய்த விதமோ,



இப்பொழுது மகிழ்ந்து நோக்குகிறார் தமது கோதுமைக்கதிரை. ஆனால் அவர் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு முன்பெல்லாம் இந்த நிலத்தில் இவ்வளவு நன்றாகக் கோதுமை விளைந்தது கிடையாது. நல்ல ரக வித்து விதைத்து இன்று அவர் நல்ல பலன் காண்கிறார்.

எங்கள் எல்லாருக்கும் பூர்ண மகிழ்ச்சியளித்தது. எங்களை இங்குமங்கும் ஏவி, வயல்களில் வேலை செய்யவிட்டு, அவர்மட்டும் பங்களாவில் காலை நீட்டிப் படுத்திருக்கவில்லை. தம் சட்டையின் கைகளைச் சுருட்டி மேலே தள்ளிக்கொண்டு, வயலில் இறங்கித் தானும் வேலை செய்வதன்மூலம் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். அவரே நிலத்தை உழுவது, உரமிடுவது எல்லா வேலையும் செய்து, அசல் இந்திய விவசாயிபோலவே நடந்து கொண்டார். இன்னும் விசேஷம் என்னவென்றால், உழுவதற்கும் அறுவடை செய்வதற்கும் புதிய பெரிய யந்திரங்களை உபயோகிக்கவில்லை; எங் களது பழைய ஆயுதங்களையே ஓரளவு அபிவிருத்தி செய்து, சொல்பச் செலவில் அதிகப் பயன்பெற வழி செய்தார்."

இவ்வாறு பேசிக்கொண்டே வந்த ஜபீர்சிங், திடீரென்று இடையிலிருந்த சிறு கால்வையைத் தாண்டி ஓடி ஒரு வயலின் வரப்பில் நின்றார். செழுமையான, பழுத்த கோதுமைக் கதிர்கள் இளங்காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்




மஹேவாவில் அஜாத்பூர் என்ற ஊரிலுள்ள விவசாயி ராம்கிஷன் அபரிமிதமாகத் தாம் விளைவித்த உருளைக் கிழங்குகளுக்கிடையில் அமர்ந்திருக்கிறார்.

டிருந்தன. அதைச் சுட்டிக்காட்டிக் கொண்டே அவர் சொல்லுவார்: "போன வருஷம் எங்களுக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. கோதுமையில் ரூ. 3 லட்சம் பெறுமான 20,000 மணங்கு, ரூ. 60,000 பெறுமான 10,000 மணங்கு உருளைக்கிழங்கு, ரூ. 13,000 மதிப்புள்ள 1,000 மணங்கு சோளம்—இவை அதற்கு முந்திய வருஷத்தைவிட அதிகமாகக் கிடைத்தன. இந்த லாபம் எங்களுக்குக் கிடைத்ததற்கு, அங்நிபுணர்கள் கூறிய யோசனையைக் கவனமாக நாங்கள் கையாண்டதும், தக்க உரம் வைத்து வளர்த்ததுமே காரணமாகும்.

ஒரு வருஷத்துக்குமுன், இங்கு ரஸ்தா என்று பேர் சொல்லக்கூடியது எதுவுமில்லை. இப்போதோ, கிராமத்தாரின் கூட்டு வேலையின் மூலம் நல்ல சாலைகள் போடப்பட்டுள்ளன.

## சம்பூர்ண சுபிட்சம்

மஹேவாவின் பல விவசாயிகளில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர் இன்னொருவ



பிணையல் அடிக்கிறார்கள்.

ருண்டு. பல்ஜு கிராமத்தைச் சேர்ந்த பச்சே லால் என்ற அவர் நல்ல உழைப்பாளி; அத்துடன் பெரிய வியவகாரஸ்தர். மஹேவாவின் கூட்டுறவுச் சங்கங்கள், பஞ்சாயத்துகள் இவை பற்றி ருசிகரமான தகவல்களைத் தந்தவர் இவரே. "இந்த அபிவிருத்தி பிராஜெக்ட் ஆரம்பமானதிலிருந்து, சகல விதங்களிலும் இங்கு சுபிட்சம் கொழிக்கத் தொடங்கியது. எங்கள் பழைய பஞ்சாயத்துகள் உயிரூட்டப்பெற்று, இப்போது இப்பிராந்தியத்தில் 47 யூனியன்கள் நடந்து வருகின்றன. எங்கள் தளவாடங்கள், ஆயுதங்கள், இன்னும் பல அத்யாவசிய வஸ்துக்களை அவற்றிடமிருந்தே வாங்கிக்கொள்கிறோம். யூனியன்களே நெசவு வேலை தெரிந்தவர்களுக்கு நூல் சப்ளை செய்து, அவர்கள் தயாரித்த துணிமணிகளை விற்பனை செய்கின்றன. சாதாரனமாக நாங்கள் வீணக்கும் நேரமெல்லாம் இப்போது பணமாகிறது. சென்ற ஒரு வருஷத்தில், சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் வரவு செலவு இந்த யூனியன் மூலம் நடந்திருக்கிறது."



ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்க உதவியளிக்கும் கூட்டுறவுச் சங்கமாகிய "கேர்" சங்கம் இந்திய கிராம சேவைக்கு உவந்தளித்த ஒரு புதுவகையான ஏரை எவ்வாறு பிடித்து உழுவது என்று இந்திய கிராம சேவையைச் சேர்ந்த எச். என். பிரசாத் ஒரு விவசாயிக்குச் சொல்லிக்கொடுக்கிறார்.

பச்சே லால் மேலும் சொல்லுவார்: **மந்திர்ஸே** என்ற மாதமிருமுறைப் பத்திரிகை எங்களுக்குண்டு. எங்களுக்கு வேண்டிய விஷயங்களெல்லாம் அதில் கிடைக்கும். சுமார் 2000 கிராமவாசிகள் அதன் சந்தாதாரர்கள். 28 சென்டர்களில் முதியோர் கல்விப்பயிற்சி நடந்து வருவதால், சீக்கிரம் இன்னும் அநேகர் அப்பத்திரிகையை வாங்குவர். இதுதவிர, வாசகசாலைகள், லைப்ரரிகள், கிராமப்பயிற்சி முகாம்கள், இவற்றின்மூலம் விவசாயிகளுக்கு எழுத்தறிவும், கல்வியறிவும் புகட்டப்பட்டு வருகிறது.

"இங்கு கால்நடை வைத்திய நிலையமும் ஒன்று உண்டு. இப்பிராந்தியம் பூராவிலும் கால்நடை அபிவிருத்தி வேலைக்கு இதுவே மூலஸ்தானம். சென்ற வருஷத்தில் ஒரு பசு அல்லது எருமை கூடத் தொற்று நோய் தீண்டி இறந்ததில்லை. மஹேவாவில் மட்டும் 50,000 மருந்தூசிகள் குத்தப்பட்டுக் கால்நடைகள் பராமரிக்கப் பட்டன.




கான்பூர் 13 என்ற புதுவகை வித்தை விதைத்து நல்ல விளைச்சல் கண்டுள்ள விவசாயி கவனித்துக்கொண்டிருக்கிறார்; வயல் அறுவடையாகிறது.

# மலேரியா ஒழிப்பு வேலை

கால்நடைகளுக்கு மட்டும் முன்காப்பான வைத்திய வேலை நடக்கவில்லை. மலேரியா, சொறி சிரங்கு முதலியவை பரவாமல் தடுக்கத் தீவிர முயற்சி நடந்துவருகிறது.

கிராம சமுதாய வாழ்க்கையில் இங்குள்ள ஜனங்களுக்குக் கிடைத்துள்ள அனுகூலங்கள் பற்றி ரதோனி என்ற 60 வயதுப் பாட்டி சொல்வதைக் கேட்போம். புது மாறுதல்களால் ஏற்பட்ட பலவித சவுகரியங்கள்பற்றி அபிப்ராயம் கேட்டபோது ரதோனி சொல்லுவாள்: "இது முற்றிலும் புதிதான ஒரு நாகரீகம். அதிகப் பணம், நல்ல உணவு, என் பேரன்மார்களுக்கு அழகான உடை, பள்ளிப் படிப்பு எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும்விட எனக்குப் பிடித்த விஷயம் புதிதாக ஏற்பட்டுள்ள சினிமா, டிராமா, பாட்டுக் கச்சேரிகள் இவைதான். இவற்றால் ஏற்படும் மனமகிழ்ச்சி தவிர, அடுத்த



உருளைக் கிழங்குகள் கோலிக் குண்டுகளைப்போலும் கூழாங் கற்களைப்போலும் விளைந்த இடத்தில் இப்போது டாக்டர் ஒயிசர் யோசனைப்படி பயிர் செய்யப்படுவதால் அவற்றைக் கையில் பிடிக்க முடியவில்லை. முகமலர்ந்து நிற்கும் பாபு ராமைக் கவனிக்க.

ஊர்ப் பெண்களைச் சந்திக்கவும் எங்களுக்கு வழி யேற்படுகிறது."

மஹேவா கிராமப் பொருளாதார அமைப் பின் மற்றொரு முக்கிய அம்சம், கிராமக் கை வேலைக்காரர்கள். ராமேஷ்வர் என்ற ஆசாரியும், முன்ஷிலால் என்ற கருமானும் சென்ட்ரல் ஒர்க் ஷாப்பில் வேலைசெய்து, விவசாயிகளின் தள வாடங்கள், ஆயுதங்கள் முதலியவற்றைச் சீர் செய்து தருகிறார்கள். இது தவிர, புதிய கை வேலைக்காரர்களுக்குப் பயிற்சி தருவதும் இந்த ஒர்க்ஷாப்புதான். ஆசாரி ராமேஷ்வர் சொல்லு கிறார்: "இப்போதெல்லாம் எனக்கு முடிந்த அளவு வேலையிருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய புதுப்புது வண்டிகள் கோர்ப்பது, பழைய வண்டி ரிப்பேர்வேலை, இவை எனக்கும் என் சகாக்களுக்கும் போதிய வேலை தருகின்றன. இந்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள சுபிட்சம் விவ சாயிகளுக்கு மட்டுமல்ல; என்னைப் போன்ற கை வேலைக்காரர்களுக்கும்தான்." பழுக்கவைத்த

இரும்பை அடிக்கத் தன் பெரும் சம்மட்டியை ஓங்கியபடியே, கருமான் முன்ஷிலால் கூறுவார்: "விவசாயிகளுக்கு வேண்டிய சில்லரைத் தளவாடங்களை நான் தயார் செய்து தருகிறேன். என்னைப்போல் பலர் அவரவர் ஊர்களில் இவ் வேலையைச் செய்கின்றனர். கூட்டுறவுச்சங்கத்தில் தவணை செலுத்தி எங்கள் ஆயுதங்கள், நிலக்கரி, எஃகு, முதலியன வாங்கிக்கொள்கிறோம். இதனால் மூலதனம் எதுவுமின்றியே எங்கள் பரம்பரைத் தொழிலைச் செய்து, முன்னைவிட அதிகக் கூலி பெற்றுவருகிறோம்."

மொத்தம் இப்பிராந்தியத்திலுள்ள 79,900 ஜனங்களில், மேலே கண்ட, ராம்கிஷன், ஜபீர் சிங், முன்ஷிலால் முதலியவர்கள் மாதிரிக்காக எடுத்துக்கொண்ட ஒரு சிலரேயாவர். அவர்கள் நினைப்பதும், சொல்லுவதும், மஹேவா வானத்தில் உதயமாகியுள்ள சுபிட்சத்தின் உண்மை அறிகுறிகளேயாம். உண்மை யுழைப்பும், ஊக்கமும் சேர்ந்து, ஆனல் வெகு காலப் பிரச்சனைக்குப் புதுவழியின் மூலம், ஏற்பட்டதே இவ்வெற்றி.

*Printed at the B. N. K. Press Limited, Madras-1*